# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1984 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கடலோடிகள் நலன்புரி நிதியச் சட்டம்

*[1984, ஜூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1984, ஜூன் மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

*விலை : ரூபா 1.20* — *தபாற் செலவு : சதம் 60*

## 1984 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கடலோடிகள் நலன்புரி நிதியச் சட்டம்

[1984, ஜூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 15/82
1536

**கடலோடிகள் நலன்புரி நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்வினவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கடலோடிகள் நலன்புரி நிதியச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், விடயத்துக்கேற்றுப்படி உள்ளூர் அல்லது வெளியூர் கப்பல் சொந்தக்காரருடன் அல்லது அத்தகைய கப்பல் சொந்தக்காரரின் முகவருடன் இலங்கையில் உறுப்புரைகளில் கையொப்பமிடும் இலங்கைக் கடலோடி ஒவ்வொருவருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். *இச்சட்டத்தின் ஏற்புடைமை.*

(2) ஓராமுட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் இச்சட்டமானது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்திட்டத்திற்கு இருவரும் உதவுதொகை செலுத்துவோரான எவரேனும் கடலோடிக்கு அல்லது அத்தகைய கடலோடியின் தொழில்தருநருக்கு ஏற்புடையதாதலாகாது.

### பாகம் I

### கடலோடிகள் நலன்புரி நிதியச் சபையைத் தாபித்தல்

**3.** கடலோடிகள் நலன்புரி நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று (இது இதனகத்துப்பின்னர் " நிதியம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டும். *கடலோடிகள் நலன்புரி நிதியத்தைத் தாபித்தல்.*

**4.** (1) கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து, கடலோடிகள் நலன்புரி நிதியச் சபை என அழைக்கப்படும் சபையொன்று (இது இதனகத்துப்பின்னர் " சபை " எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டும். *கடலோடிகள் நலன்புரி நிதியச் சபையைத் தாபித்தல்.*

(2) சபையானது, இடையறு வழியுரிமையையும், ஒரு பொது இலச்சினையையும்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**5.** (1) சபையானது அமைச்சரால் நியமிக்கப்பட்ட பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— *சபையின் உறுப்பினர்கள்.*

(அ) கப்பற் போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் ;

(ஆ) வணிகக் கப்பற் போக்குவரத்துப் பணிப்பாளர் ;

எ 076102—2,625 (03/48)

(இ) கப்பற் போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின் பிரதான கணக்காளர் ;

(ஈ) தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் ; அத்துடன்

(உ) கடலோடிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரொருவர்.

(2) சபையின் தவிசாளர் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், அவ்வாறு செய்வது உசிதமானதென அவர் எண்ணினால், சபையின் உறுப்பினரெவரையும், பதவியிலிருந்து அகற்றுவதற்கான காரணம் எதனையும் காட்டாது, அவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) பதவியிலிருந்து அகற்றப்பட்டவரான சபையின் உறுப்பினரொருவர் சபையின் உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலாகாது.

(5) சபையின் உறுப்பினரொருவர் அமைச்சருக்கு முகவரியிட்ட எழுத்திலான அறிவித்தல்மூலம் எந்நேரத்திலும் தமது பதவியைத் துறக்கலாம்.

(6) சபையின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக, அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்திற்காக தமது பதவிக்கான கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற முடியாதவராக இருந்தால், அமைச்சரானவர், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(7) சபையின் உறுப்பினரொவ்வொருவரும், இறப்பதன்மூலம், பதவிதுறப்பதன்மூலம், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம், முன்னதாகவே தமது பதவியை வறிதாக்கினாலன்றி, மூன்றாண்டுக்காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் காலங்கழிவதன் காரணமாகத் தமது பதவியைத் துறக்கின்றவரான சபையின் உறுப்பினரெவரும் மீள நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராதல் வேண்டும்.

(8) சபையின் உறுப்பினரெவரும், அவரின் பதவிக்காலம் முடியுமுன்னரே தம் பதவியை வறிதாக்கினால் அவரை அடுத்துறுபவர், அத்தகைய அடுத்துறுபவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் எந்த ஆளை அடுத்துறுகின்றாரோ அந்த ஆளின் பதவிக்காலத்தில் முடிவுறாது எஞ்சியுள்ளகாலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(9) சபையில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றதென்ற காரணத்தினால் அல்லது சபையின் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் ஒழுங்கீனம் இருக்கின்றதென்ற காரணத்தினால் மட்டும் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதலாகாது.

(10) சபையானது, விதிகள்மூலம் அதன் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்யலாம்.

6. சபையின் உறுப்பினர்களுக்கு அமைச்சரின் அங்கீகாரத்துடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும், அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும். *சபை உறுப்பினரின் ஊதியம்.*

7. சபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:— *சபையின் குறிக்கோள்கள்.*

(அ) கடலோடிகளுக்கு அல்லது அவர்களின் தங்கிவாழுநருக்கு, குறிப்பாக சுகவீனம் அல்லது மரணம் ஏற்படும் விடயங்களில் நிதியுதவி புரிதற்கு ஏற்பாடுசெய்தல் ;

(ஆ) கப்பலொன்றில் வேலைசெய்யும்பொழுது ஏற்பட்ட விபத்தொன்றின் விளைவாக பிணியுற்ற, வலுவிழந்த அல்லது அத்தகைய கப்பலில் வேலைசெய்ய இயலாதவரான கடலோடிகளுக்கு தண்ணளி நிதியுதவி புரிவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(இ) உயர் கல்வியைத் தொடர்வதற்கும் தமது திறமைகளை மேம்படுத்துவதற்கும் விரும்பும் கடலோடிகளுக்கு நிதியுதவி புரிவதற்கு ஏற்பாடுசெய்தல் ;

(ஈ) வெளிநாட்டுத் துறைமுகங்களில் பின்தங்கவிடப்பட்ட கடலோடிகளுக்கு நிதியுதவி புரிவதற்கு ஏற்பாடுசெய்தல் ;

(உ) வலுவிழந்தவர்களான, அல்லது ஏதேனும் கலனில் இருக்கும்போது சாவுக்குரிய விபத்தொன்றுக்குள்ளானவர்களான கடலோடிகளின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில்களுக்கு ஏற்பாடுசெய்தல் ; அத்துடன்

(ஊ) இப்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது அதற்கு உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது கருமங்களையும் செய்தல்.

8. சபையானது அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நியாயமாகத் தேவைப்படும் அத்தகைய தத்துவங்களையும், பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், குறிப்பாக — *சபையின் தத்துவங்கள்.*

(அ) இச்சட்டத்தின்கீழ் நிதியத்திற்கு உதவுதொகையாகச் செலுத்தப்பட்ட எல்லாத் தொகைகள், நிதியத்தின் பணங்களை முதலீடுசெய்ததிலிருந்து பெறும் வருமானம் என்பவற்றைப் பெறுதலும், அத்தகைய தொகைகளையும் வருமானங்களையும் நிதியத்தில் வரவுவைத்தலும் வேண்டும்;

(ஆ) நிதியத்தின் பணங்களை அதன் கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும் ;

(இ) சபையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆட்களுக்கு, இச்சட்டத்தின்கீழ் அவர்கள் உரித்துடையவர்களாகும் நலவுரிமைகளைச் செலுத்துதல் வேண்டும் ;

(ஈ) நிதியத்தின் பணங்களில், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாதனவற்றை சபை தக்கதெனக் கருதுகின்றனவான அத்தகைய பங்குகளில்

அல்லது பிணைப்பொறுப்புக்களில் முதலீடுசெய்யலாம்; அத்துடன் அத்தகைய பங்குகளையும் பிணைப்பொறுப்புக்களையும் விற்பனை செய்யலாம்;

(உ) நிதியம் தொடர்பாக ஒரு பொதுக்கணக்கைப் பேணுதல் வேண்டும்;

(ஊ) நிதியம் தொடர்பான கணக்கேடுகளை ஒவ்வோராண்டிலும் டிசெம்பர் மாதம் முப்பத்தோராம் தேதியன்று ஐந்தொகைப்படுத்துவிக்கச்செய்தல் வேண்டும்;

(எ) ஒவ்வோர் ஆண்டுக்கான நிதியம் தொடர்பாகவும் வரவுகள், கொடுப்பனவுகள் பற்றிய கூற்றொன்றையும், வருமானம், செலவினம் என்பன பற்றிய கூற்றொன்றையும், சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பன பற்றிய கூற்றொன்றையும் அத்துடன் முதலீடுகள் ஒவ்வொன்றினதும் முதற்றேற்றப் பெறுமதியையும் கொள்விலையையும் சந்தைப் பெறுமதியையும் காட்டும் முதலீடுகளின் கூற்றொன்றையும் தயாரிக்கச்செய்தல் வேண்டும்;

(ஏ) ஒவ்வோர் ஆண்டு தொடர்பிலும் (எ) என்னும் பந்தியின் கீழ் தயாரிக்கப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை அடுத்துவரும் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் முப்பதாம் நாளுக்கு முன்பு அனுப்பிவைத்தல் வேண்டும்;

(ஐ) ஒவ்வோர் ஆண்டும் தொடர்பான நிதியத்துப் பணங்களின் முதலீடுகளிலிருந்து அந்த ஆண்டில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்கும், பயன்கொடுப்பதற்கும் சபையினால் உறப்பட்ட செலவுகளைக் கழித்தல் வேண்டும்;

(ஒ) உண்ணாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து மானியக்கொடைகளையும் கொடைகளையும் நன்கொடைகளையும் காசாக அல்லது வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளலாம்;

(ஓ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளலாம், வைத்திருக்கலாம், ஏற்கலாம் அல்லது கொடுக்கலாம், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடலாம், ஈடுவைக்கலாம், அடகுவைக்கலாம், அத்துடன் விற்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம்;

(ஔ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், அதன் கடமைகளைப் புரிவதற்கும், அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் சபையினால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

## பாகம் II

### நிதி

9. (1) சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். — நிதியாண்டும், கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும்.

(2) சபையின் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும், அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை சபை வைத்திருக்கச்செய்தல் வேண்டும்.

(3) கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், சபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

10. நிதியத்துக்குரிய எவையேனும் பணங்கள், சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் சபையினால் முதலீடு செய்யப்படலாம். — நிதியத்துப் பணங்களை முதலீடு செய்தல்.

11. (1) நிதியமானது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து அல்லது செல்வ வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். — குறித்த சில வரிகளிலிருந்து நிதியத்துக்கு விலக்களித்தல்.

(2) நிதியத்துக்கு எவரேனும் ஆள் கொடையொன்றை அளிக்குமிடத்து, கொடையின் மொத்தப் பெறுமதியின் அளவுக்கு, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் கொடைவரி செலுத்துவதிலிருந்து அவர் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) நிதியத்துக்கு எவரேனும் ஆள் நன்கொடையொன்றை வழங்குமிடத்து, அத்தகைய நன்கொடையானது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டதொரு செலவினமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நன்கொடையாளர், அத்தகைய நன்கொடையின் மொத்தப் பெறுமதி தொடர்பாக அச்சட்டத்தின்கீழ் நிவாரணம் பெறுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(4) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டும்.

## பாகம் III

### உதவுதொகைகள்

12. (1) கடலோடியொருவர், முதலில் 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துவதற்கு ஆளாகின்றவிடத்து, அவர் நிதியத்தின் உறுப்பினராதல் வேண்டுமென்பதுடன், அவர் நிதியத்தின் உறுப்பினராகத் தொடர்ந்திருத்தலும் வேண்டும். — நிதியத்தின் உறுப்பாண்மை.

(2) நிதியத்தின் உறுப்பினர் அல்லது அவரின்கீழ் உரிமை கோரும் ஆள் எவரும், இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் அல்லது விதித்துரைக்கப்படக்கூடியதான ஏதேனும் ஒழுங்கு விதியின் பயனைக்கொண்டு தவிர வேறுவகையில் நிதியத்தின் பணங்களில் ஏதேனும் அக்கறையைக் கொண்டிருத்தலோ அல்லது அதற்கு உரிமைகோருதலோ ஆகாது.

**வழமையான உதவுதொகைகள்**

13. (1) இச்சட்டம் ஏற்புடையதாகும் கடலோடியொருவர் எந்த மாதத்தில் சமுத்திரத்தில் செல்லும் கலமொன்றில் அவர் வேலை செய்கின்றாரோ அந்த மாதமொவ்வொன்று தொடர்பிலும் அந்த மாதத்தின்போது அவர் பெறும் மேலதிக நேர உழைப் பூதியம் தவிர்ந்த, முழுச்சம்பாத்தியங்களின் இரண்டு சதவீதத்துக்குச் சமமான தொகையான உதவுதொகையொன்றை நிதியத்துக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றவரும் நிதியத்துக்கு உதவு தொகை செலுத்துவதற்கு ஆளாகின்றவருமான கடலோடி ஒவ்வொருவரதும் தொழில்தருநர், எந்த மாதத்தின்போது அத்தகைய கடலோடி அத்தகைய தொழில்தருநரின்கீழ் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த மாதம் ஒவ்வொன்று தொடர்பிலும் அடுத்துவரும் மாதத்தின் கடைசிநாளுக்கு முன்பு அந்த மாதத்தின்போது அத்தகைய கடலோடி பெறும் மேலதிக நேர உழைப் பூதியம் தவிர்ந்த, முழுச்சம்பாத்தியங்களின் மூன்று சதவீதத்துக்குச் சமமான தொகையான உதவுதொகையொன்றை நிதியத்துக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

**நிதியத்துக்கான உதவுதொகைகள்.**

14. நிதியத்திற்கான உதவுதொகைகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) கடலோடிகளிடமிருந்தும், கடலோடிகளின் தொழில்தருநரிடமிருந்தும் உதவுதொகைகள் மூலம் சபையினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி எத்தன்மைத்தானதுமான ஏதேனும் வழிவகைகளிலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் என்றவகையில் சபையினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) முதலீடுகளிலிருந்து பெறும் வருமானம் என்றவகையில் சபையினால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

**உதவுதொகைகள் முதலியவற்றின் மீதான வட்டி.**

15. ஒவ்வோர் ஆண்டுக்காகவும் அவ்வாண்டின் திசெம்பர் மாதம் முப்பத்தோராம் நாளன்று உள்ளபடி நிதியத்தின் பணமுதலீட்டிலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து அமைச்சரினதும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் காலத்துக்குக்காலம் சபையினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான மூன்று சதவீதத்துக்குக் குறையாத அத்தகைய வீதத்திலான வட்டியானது கொடுக்கப்படுதல் வேண்டும்.

**16.** (1) சபையானது, 7 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும், நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை மதிப்பீடு செய்வதிலும், கடலோடி ஒவ்வொருவராலும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தில் கூறப்பட்ட கருமங்கள் எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு நியாயமான நிதி உதவிக்கு ஏற்பாடுசெய்தல் வேண்டும்.

*நிதியத்திலிருந்து பணத்தைக் கொடுப்பனவு செய்தல்.*

(2) சபையினால் மதிப்பீடுசெய்யப்பட்ட தொகையானது, இயலக்கூடியளவு விரைவாக அவ்விண்ணப்பத்தைச் செய்யும் கடலோடிக்கு அல்லது அவர் இறந்தால் அவரது மரபுரிமையாளருக்கு, மரணச்சொத்து நிருவாகிக்கு அல்லது சான்றுபெறுநருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**17.** செலுத்தப்படவேண்டிய தேதியன்று, இச்சட்டத்தின்கீழ் கொடுபடற்பாலதான ஏதேனும் உதவுதொகை நிதியத்துக்குச் செலுத்தப்படாதவிடத்தும் அத்தகைய உதவுதொகையைச் செலுத்தத் தவறியமை தொழில்தருநரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதெனச் சபை திருப்திப்படுமளவுக்கு விளக்கமளிப்பதற்குத் தொழில்தருநர் இயலாதவராக இருக்கின்றவிடத்தும் அவர் அத்தகைய உதவுதொகையுடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வரும் முறையில் கணக்கிடப்படும் அத்தகைய முறையிலான மிகையிறுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும் :—

*ஏதேனும் உதவுதொகைகள் செலுத்தப்படாதவிடத்து தொழில்தருநர் மிகையிறுப்பனவு செலுத்துதல்.*

(அ) அத்தகைய உதவுதொகை ஒரு மாதத்துக்கு மேற்படாத காலப்பகுதிக்கு நிலுவையாக இருக்கின்றவிடத்து, அத்தகைய உதவுதொகையின் பத்து சதவீதத்திலான மிகையிறுப்பனவொன்று ;

(ஆ) அத்தகைய உதவுதொகை ஒரு மாத காலப்பகுதிக்கு மேற்பட்ட ஆனால் மூன்று மாத காலப்பகுதிக்கு மேற்படாமல் நிலுவையாக இருக்கின்றவிடத்து அத்தகைய உதவுதொகையின் பதினைந்து சதவீதத்திலான மிகையிறுப்பனவொன்று ;

(இ) அத்தகைய உதவுதொகை மூன்று மாத காலப்பகுதிக்கு மேற்பட்ட ஆனால் ஆறு மாத காலப்பகுதிக்கு மேற்படாமல் நிலுவையாக இருக்கின்றவிடத்து அத்தகைய உதவுதொகையின் இருபது சதவீதத்திலான மிகையிறுப்பனவொன்று ; அத்துடன்

(ஈ) அத்தகைய உதவுதொகை ஆறு மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு நிலுவையாக இருக்கின்றவிடத்து இருபத்தைந்து சதவீதத்திலான மிகையிறுப்பனவொன்று.

## பாகம் IV

### சபையின் பணியாட்டொகுதி

**18.** (1) சபையானது, அதன் பணிகளைத் திறமையாக நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

*அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.*

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்திலும், அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்கள் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தவர்களாதலும் வேண்டும்.

(3) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்தோடு, அதுபோன்ற சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவரும் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவைபுரிவதற்கு உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை, சபையானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அந்த ஆளினால் சபைக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அரசாங்கத்துக்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) சபையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர், அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் வேறெவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய உறுப்பினரது, அலுவலரது அல்லது சேவையாளரதும் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையினதும் அல்லது உள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்தோடும் அச்சபையினால் அதேபோன்ற சம்மதத்தோடு தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அல்லது விடயத்திற்கேற்றவாறு அச்சபையும், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையும் அல்லது உள்ளூரதிகாரசபையும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான ஓய்வூதிய உரிமைகள் அல்லது

சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட, அத்தகைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீது, அதேபோன்ற சம்மதத்தோடு சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் சம்மதத்தோடும், அச்சபையினால் அதேபோன்ற சம்மதத்தோடு தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குச் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அச்சபையும், பகிரங்கக் கூட்டுத்தாபனமும் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான ஓய்வூதிய உரிமைகள் அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட, அத்தகைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(9) ஏழாம் உட்பிரிவை அல்லது (8) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி எவரேனும் ஆள் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவர், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினரைப்போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் V

### பொது

சபையின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படவேண்டும் என்பது.

**19.** நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்டதொரு நிறுவகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

**20.** சபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவகமாகக் கருதப்படவேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

சபைக்கு சிறப்பான அல்லது பொதுவான பணிப்புரைகளைக் கொடுப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

**21.** (1) அமைச்சரானவர், சபையின் கடமைகளைப் புரிதல், தத்துவங்களைப் பிரயோகித்தல் என்பனபற்றிச் சிறப்பான அல்லது பொதுவான பணிப்புரைகளை எழுத்தில் கொடுக்கலாம் என்பதுடன், சபை அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், காலத்துக்குக்காலம் சபையின் வேலை தொடர்பாக தமக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய தகவலை எழுத்துமூலம் தமக்குக் கொடுத்துதவுமாறு சபைக்குப் பணிக்கலாம்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப் பின்மேல் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாது காப்பு.

22. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காகச் சபைக்கு எதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ், அல்லது சபையின் பணிப்பின்மீது, எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவருக்கெதிராக,

தொடர்ச்சி அல்லது குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், அத்தகைய ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின் சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினர் ஒருவரின் உடலுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

23. சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் சபையின் உறுப்பினரொருவரின் உடலுக்கெதிராகவோ அல்லது அவரது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

தவறுகள்.

24. (அ) இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதியின் ஏற்பாடுகளுள் எதனையேனும் மீறுகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவரது அறிவுக்குட்பட உண்மையற்ற அல்லது பிழையான ஏதேனும் தகவலை அல்லது அத்தகைய தகவல் அடங்கியுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது அத்தகைய ஆவணத்தின் ஏதேனும் பாகத்தினைக் கொடுத்துதவுகின்ற,

எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

25. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவையான அல்லது இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவையான ஏதேனும் கருமம் தொடர்பாக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல்வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று, அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுக்குவிதியொவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனல் அதன்கீழ் அதன்முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கஞ்செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கஞ்செய்யப்பட்ட தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**26.** இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினலன்றி— பொருள்கோடல்.

"கடலோடி" என்பது 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற் போக்குவரத்துச் சட்டத்திலுள்ள அதே பொருளை உடையதாதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 160 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.